[28th March 1959

Rameswaram Board High School.

* 1031 *Q.*—SRI N. MARUDACHALAM (on behalf of SRI N. K. PALANISAMI): Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether there was a strike in the Board High School, Rameswaram, during November 1958;

(*b*) if so, on what grounds; and

(*c*) whether the students of the Board High School protested the use of Congress Flag during the procession of students on Children's Day on 14th November 1958?

THE HON. SRI C. SUBRAMANIAM: (*a*) Yes, Sir. There was a partial strike during November 1958.

(*b*) & (*c*) A statement[a] is placed on the table of the House.

SRI N. MARUDACHALAM: ஸார், மாணவர்களை அரசியலில் பங்கு கொள்ளக் கூடாது என்று கூறிவிட்டு, அவர்களை ஒரு கட்சிக் கொடியை பிடிக்கச் சொல்லி நிர்ப்பந்தித்தது நியாயம் தானா?

THE HON. SRI C. SUBRAMANIAM: இந்த ஸ்டேட்மெண்ட்டைப் படித்திருந்தால் இந்த மாதிரிக் கேள்வியைப் போட்டிருக்க மாட்டார் என்று நினைக்கிறேன். மாணவர்களைக் கொடி பிடிக்க வேண்டுமென்று யாரும் சொல்லவில்லை. ஒரு காங்கிரஸ்காரர் காங்கிரஸ் கொடி பிடித்துப் போனார். அந்த ஊர்வலத்திலே காங்கிரஸ் கொடி வரக்கூடாது என்று தடுத்து விட்டார்கள்.

Village Officers.

* 1032 *Q.*—SRI M. K. SOMASUNDARAM (on behalf of SRI V. SANKARAN): Will the Hon. the Minister for Revenue be pleased to tate whether there is any proposal to increae the emoluments of village officers from 1959 as was done in the case of Non-Gazetted Officers?

THE HON. SRI M. A. MANICKAVELU: No, Sir.

SRI S. M. ANNAMALAI: ஸார், இந்த கிராம உத்தியோகஸ்தர்கள் சர்க்கார் உத்தியோகஸ்தர்களைப் போல முழு நேர உத்தியோகஸ்தர்களாகக் கருதப்படாமல் இருந்த போதிலும் 24 மணி நேரமும் வேலை செய்யக்கூடிய நிலையில் இருப்பதால், அவர்களை நான்-கெஜடெட் ஆபீசர்களாக அங்கீகரிக்க சர்க்கார் முன் வருவார்களா?

THE HON. SRI M. A. MANICKAVELU: அவர்கள் முழு நேர ஊழியர்கள் இல்லை என்பது உண்மை. அதை அனுசரித்து வெகு நாட்களாக அந்த முறையிலே சம்பளம் கொடுக்கப்பட்டு வருகிறது. அதையெல்லாம் பரிசீலனை செய்து முழு நேர ஊழியர்களாக நியமிக்கலாமா என்பதெல்லாம் பரிசீலனையில் இருக்கிறது.

SRI P. G. MANICKAM: ஸார், சர்க்காரால் மேற் கண்ட பரிசீலனை அநேக காலமாக நடத்தப்பட்டு வருகிறது. அது எப்போது முடிவிற்கு வரும்? அது எப்போது அமுலுக்குக் கொண்டு வரப்படும் என்று அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா?

THE HON. SRI M. A. MANICKAVELU: அநேகமாக சீக்கிரமாகவே ஒரு முடிவிற்கு வந்து அதைச் சில இடங்களில் அமுலுக்குக் கொண்டு வரலாம் என்ற நம்பிக்கை இருக்கிறது.

---

[a] Printed as Appendix II on pages 814–815 infra.